**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 81** **நாள் 23.06.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் குறித்து ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.**

= = = = =

மழைநீர் சேகரிப்பு திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதல்வர் அம்மா அவர்களின் எண்ணத்தில் தோன்றிய சிறந்த தொலைநோக்கு திட்டமாகும். தமிழ்நாட்டில் அனைத்து வீடுகள், அரசு கட்டடங்கள், தனியார் கட்டடங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அவசியம் என்ற சட்ட திருத்தத்தை கொண்டு வந்து தமிழ்நாடு அனைத்து மாநிலங்களுக்கும் முன்மாதிரியாக திகழ்கிறது. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை கட்டாயமாக்கிய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

தற்போது, மாநிலத்தில் குறிப்பாக சென்னை பகுதிகளில் பருவமழை பொய்த்த காரணத்தினால் குடிநீர் தட்டுப்பாடு உள்ள நிலையிலும் தமிழ்நாடு அரசு போர்கால அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து பொது மக்களுக்கு தேவையான குடிநீரை அன்றாடம் வழங்கி வருகிறது.

மேலும், வருகின்ற பருவமழை காலங்களில் கிடைக்கும் மழைநீரை வீணாக்காமல் சேகரித்து நிலத்தடி நீரின் அளவை உயர்த்த ஏதுவாக அனைத்து வீடுகள், கட்டடங்கள் மற்றும் தொழிற் நிறுவனங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் நல்ல நிலையில் பராமரிக்கப்பட வேண்டும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். இதனை தொடர்ந்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊரக பகுதிகளில் வீடுகள், கட்டடங்கள் மற்றும் தொழிற் நிறுவனங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை ஆய்வு செய்யவும், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு இல்லாத கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை அமைத்திட பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள்.

இதனை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் இன்று **(23.06.2019)** அடையாறு மண்டலம், ரஞ்சித் சாலையிலுள்ள குடியிருப்புகளில் நேரிடையாக சென்று மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை ஆய்வு செய்தார். பின்னர் பொது மக்களிடையே மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் ஆணையாளர் அவர்கள் தெரிவித்ததாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களின் உத்தரவின்படி சென்னை மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட வீடுகள், கட்டடங்கள் மற்றும் தொழிற் நிறுவனங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளதா என இன்று முதல் துணை ஆணையாளர்கள், மண்டல அலுவலர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு அவற்றை பராமரிப்பது குறித்து பொதுமக்களுக்கு தகுந்த ஆலோசணைகள் வழங்கப்படவுள்ளது. சென்னை மாநகராட்சி பகுதிகளில் சுமார் 12.5 லட்சம் எண்ணிக்கையில் சொத்துக்கள் உள்ளன. வடகிழக்கு பருவமழை துவங்குவதற்கு முன்னர் முதல் கட்டமாக ஒரு வார்டுக்கு 1000 வீடுகள் வீதம் சுமார் 2 லட்சம் வீடுகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்து வீடுகளிலும் மழைநீர் சேரிப்பு கட்டமைப்புகள் அமைக்க மாநகராட்சியால் பொதுமக்களுக்கு ஆலோசணைகள் வழங்கப்பட உள்ளது. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சியும், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியமும் இணைந்து மழைநீர் சேகரிப்பது குறித்த 10 லட்சம் பிரசுரங்களை பொது மக்களுக்கு வழங்க உள்ளனர். எனவே, பொதுமக்கள் நிலத்தடி நீர்மட்டத்தினை அதிகரிக்க ஏதுவாக தங்கள் இல்லங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை 100% அமைத்து அரசின் இம்முயற்சிக்கு தங்களின் முழு ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் வழங்க வேண்டும் என ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் ஆணையாளர் அவர்கள் பொதுமக்கள் தங்களின் அன்றாட நடைமுறைகளில் சிறு, சிறு மாற்றங்களின் மூலம் தண்ணீரை சேகரிக்கும் நடைமுறைகள் குறித்தும், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைத்து பராமரிப்பது குறித்தும் விழிப்புணர்வு பிரசுரங்களை வழங்கினார். உடன் தலைமை பொறியாளர் (பாலங்கள்) திரு.எஸ்.ராஜேந்திரன், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய தலைமை பொறியாளர் திரு.ஆறுமுகம், மண்டல அலுவலர், செயற்பொறியாளர் உட்பட பலர் உள்ளனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**